**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தஞ்சாவூர்**
**அசல் வழக்கு எண். 129/2020**
**பி.வா.சா.1**

**நாள் : 10.09.2025**

சாட்சியின் வாக்கு மூலம் 1969ஆம் ஆண்டின் 54–ம் விதி 95–வது பிரிவின்படி திருமதி. சீத்தாலெட்சுமி இருக்கை எழுத்தரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கோவிந்தராஜ் | சமயம்: | |
| த/பெ.: | | தொழில்: | |
| கிராமம்: | | வயது: | |
| தாலுக்கா: | | | |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை :**

நான் அசல் வழக்கில் பிரதிவாதியாவேன். நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுத படிக்கத்தெரியும். நான் பொதுவாக தமிழில் கையொப்பம் செய்வேன். என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை நான் கூறியதன் அடிப்படையில் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதை நான் படித்து பார்த்து நான் சொன்ன சங்கதிகள் இருப்பதை உறுதி செய்து கொண்ட பிறகு கையொப்பம் செய்துள்ளேன். எனவே மேற்படி என்னுடைய எழுத்து பூர்வமான முதல் விசாரணை வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில் பட்டியலிட்டஆவணங்களை சான்றாவணமாக குறியீடு செயய் வேண்டுகிறேன்.

அதன்படி, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டது. (மேற்படி ஆவணங்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் தொடர்பில்லை என்று வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. அவருடைய ஆட்சேபனைக்கு உட்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது)

வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டு என் கையெழுத்து செய்யப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
தஞ்சாவூர்.